**தலைப்பு 401 – தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 ஒக்தோபர் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்தோபர் 04 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையொன்றை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி இராஜாங்க அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2020 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இராஜாங்க அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டிருந்ததால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் ஒத்திருக்கின்றன என்பதை என்னால் கூற முடியாதுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 வருமான பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 3,334,850 தொகையான வரியல்லாத வருமானம் மற்றும் ஏனைய பெறுவனவுகள் நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை அல்லது ஏசீஏ-1 படிவத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய வரியல்லாத வருமானம் மற்றும் ஏனைய பெறுவனவுகள் மூலமான ஏசீஏ-1 படிவம் நிதிச் செயலாற்றல் கூற்றில் விடுபட்டதனால் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதில் உள்ளடக்கப்பட வேண்டிய ரூபா 3,334,850 வருமானம் ஏசீஏ-எவ் படிவத்தில் ஏனைய பெறுவனவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் வருமானம் சரியாகக் காட்டப்பட வேண்டும். |

### 1.6.2 வருமானமல்லாத பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 3,893,593 வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா 3,334,850 வரி விதிக்கப்படாத வருமானம் மற்றும் ஏனைய பெறுவனவுகளிற்கு பதிலாகக் குறிப்பிடப்பட்டுள்ளதால் திறைசேரி கட்டுநிதிப் பெறுவனவுகள் ரூபா 558,743 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | ரூபா 558,743 தொகையான திறைசேரி கட்டுநிதி பெறுவனவகள் திறைசேரி கட்டுநிதிகளின் கீழ் குறிப்பிடப்படாமல் ஏனைய பெறுவனவுகளின் கீழ் பிழையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருமானம் மற்றும் கட்டுநிதிப் பெறுவனவுகள் நிதிக்கூற்றுக்களில் சரியாக குறிப்பிடப்பட வேண்டும். |

### 1.6.3 கட்டுநிதி சீராக்கல் கணக்கு

கட்டுநிதி சீராக்கல் கணக்கு தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 471,556,177 தொகையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு முன்னர் கட்டுநிதி மீதி ரூபா 470,997,434 ஆகக் காட்டப்பட்டது, இதனால் ரூபா 558,743 ஆல் குறித்த மீதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | திறைசேரி கட்டுநிதி பெறுவனவுகள் ஏசிஏ படிவத்தில் ஏனைய பெறுவனவுகளின் கீழ் ரூபா 558,743 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்ததால் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு முன்னர் குறித்த தொகை கட்டுநிதி மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் கட்டுநிதிகள் சரியாக குறிப்பிடப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 450,860,602 தொகையான ஏனைய செலவினத் தலைப்புகளில், வரவுகள் ரூபா 448,224,342 ஆகக் காட்டப்பட்டிருந்ததால் குறித்த மீதி ரூபா 2,636,260 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| (இ) | ரூபா 23,817,234 தொகையான வைப்புப் பெறுவனவுகள் ரூபா 23,824,684 ஆகக் காட்டப்பட்டிருந்ததால் குறித்த மீதி ரூபா 7,450 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.4 காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்று தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் பெறுமதி ரூபா 105,974,850 ஆக காணப்பட்ட போதிலும் குறித்த பெறுமதி ரூபா 106,533,594 ஆகக் காட்டப்பட்டிருந்தது, இதனால் குறித்த காசுப்பாய்ச்சல் ரூபா 558,744 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய பணம் ரூபா 106,533,594 ஆக காட்டப்பட்டிருந்தது. மேலும், ரூபா 558,744 தொகையான திறைசேரி கட்டுநிதி பெறுவனவுகள் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | காசுப்பாய்ச்சல்கள் நிதிக்கூற்றுக்களில் சரியாக குறிப்பிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | காசுப்பாய்ச்சலின் கீழ் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஏற்பட்ட ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 65,253,599 தொகையான போதிலும் அது ரூபா 65,402,556 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததால் குறித்த காசுப்பாய்ச்சல் ரூபா 148,597 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் காசு வெளிப்பாய்ச்சல் வகைப்படுத்தப்பட்டு காட்டப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| (இ) | ரூபா 3,797,142 தொகையான வைப்பு பெறுவனவுகள் நிதி நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் ரூபா 3,789,692 ஆக காட்டப்பட்டிருந்ததால் குறித்த காசுப்பாய்ச்சல் ரூபா 7,449 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.5 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

இராஜாங்க அமைச்சு பின்வரும் சில பதிவேடுகளை பேணியிருக்காததுடன் ஏனைய சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டவாறும் பேணப்பட்டிருக்காதமை தெரிவுக் கணக்காய்வு பரிசாதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களின் தகவல்களையும் உள்ளடக்கி பிணைப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சு 2020 ஆம் ஆண்டு புதிதாக நிறுவப்பட்டதன் விளைவாக கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு உத்தியோகத்தர்கள் காணப்படாததாலும் பட்டதாரி பயிலுநர் உத்தியோகத்தர்களை கடமைகளில் ஈடுபடுத்துவதாலும் பிணைப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் குறித்த பதிவேடுகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களினதும் தகவல்களை உள்ளடக்கி பிணைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் குறித்த பதிவேட்டை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் ஒழுங்காக பரீட்சிக்கப்படக்கூடியவாறு பொறுப்புக்கள் பதிவேடொன்றில் பதிவு செய்யப்பட வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 502 இன் பிரகாரம் ஊழியர்களின் அனைத்து கடன் மீதிகளும் உறுப்பினர்களின் கடன் பதிவேட்டில் (CC-10) பதிவுசெய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 225,390 தொகையான இடர் கடன் மீதி அதில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய ரூபா 225,390 தொகையான கடன் மீதி 2021 இன் கடன் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கடன் மீதி 2021 சனவரி தொடக்கம் அறவிடப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணம் 502 இன் பிரகாரம் அனைத்து ஊழியர்களின் கடன் மீதிகளும் உறுப்பினர்களின் கடன் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஒக்தோபர் 07 தொடக்கம் இராஜாங்க அமைச்சின் கீழ் செயற்படும் கண்டிய மரபுரிமையை பாதுகாப்பதற்கான நியதிச்சட்ட சபை எனும் பெயரிலான நிறுவகத்தை செயற்படுத்துவதற்காக கட்டிடம் ஒன்று பெறப்பட்டிருந்தது. 2020 ஏப்ரல் முதல் நவம்பர் வரை அதற்காக ரூபா 6,640,000 தொகையான குத்தகை வாடகைகான செலவினம் மேலதிக செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 401-01-02-1404 ஆம் இலக்க இராஜாங்க அமைச்சின் குத்தகை வாடகை மற்றும் உள்ளூராட்சி சபைகளின் வரி செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் இந் நிறுவகத்தை செயற்படுத்துவதற்கு சனாதிபதியின் செயலாளரின் 2020.10.07 ஆம் திகதிய பிஎஸ்/சீஎஸ்ஏ/00/1/6/1 ஆம் இலக்க கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டிற்கான இந்த நிறுவனத்திற்குரிய மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்கள் தொடர்பான நிதியேற்பாடு தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் வரவு செலவுத்திட்ட திணைக்களத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க வரவு | இராஜாங்க அமைச்சின் செலவின விடயம் ஊடாக மேற்கொள்ளப்படும் செலவினங்களை சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் இருந்து தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலவுத்திட்ட திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளின் கீழ் கட்டிட வாடகைகள் உள்ளடங்கிய நிறுவகத்தின் நிலுவைக் கொடுப்பனவுகள் உட்பட செலவினங்களின் கொடுப்பனவு தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | வீடமைப்பு மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட ரன்மினிதென்ன ரெலி சினிமா பூங்காவின் 2019 திசெம்பர் மாதத்திற்குரிய துப்புரவு பணி தொடர்பாக ரூபா 689,054 தொகையான செலவினம் இராஜாங்க அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் குறித்த அமைச்சிலிருந்து உரிய செலவினங்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தகவல் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் கீழ் மகிந்த ராஜபக்ஷ தேசிய ரெலி சினிமா பூங்கா இருந்த காலப்பகுதியின் போது நிதியேற்பாட்டில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக மேற்குறிப்பிட்ட கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் குறித்த கொடுப்பனவுகள் 2019 திசெம்பர் அளவில் வீடமைப்பு மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. எனினும் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியுடன் தொடர்புடைய துப்புரவு சேவைகளை வழங்குவதற்காக செலுத்த வேண்டிய ரூபா 689,054 தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. மகிந்த ராஜபக்ஷ தேசிய ரெலி சினிமா பூங்காவானது தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் வந்த சமயத்தில் குறித்த உறுதிச்சீட்டு செலுத்தப்படாத விலைப்பட்டியலாக மஹிந்த ராஜபக்ஷ தேசிய ரெலி சினிமா பூங்காவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>அதற்கிணங்க உரிய நிறுவகத்திற்கு செலுத்த வேண்டிய மேற்குறிப்பிட்ட உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 689,054 தொகை 2020 ஆம் ஆண்டுக்கான நிறுவகத்திற்கான மீண்டெழும் செலவினத்தின் மூலம் செலுத்தப்பட்டிருந்தது. | உரிய அமைச்சிடம் இருந்து செலவினத்தை தீர்ப்பனவு செயற்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 450,000 மற்றும் ரூபா 150,000 தொகையான மொத்த தேறிய நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. உரிய நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டமைக்கான முறையே கட்டிடங்களின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி மற்றும் இயந்திரங்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் போன்ற செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முயற்சியெதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், புதிய அமைச்சொன்றாக ஸ்தாபித்தல், கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் மனித மற்றும் பௌதீக வளங்களின் பற்றாக்குறை என்பன நிதியேற்பாடு சேமிக்கப்பட்டதற்கான காரணங்களாகக் காணப்பட்டன. | இந்த அமைச்சு 2020.08.09 ஆம் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் நிறுவப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய், அதிகாரிகள் பற்றாக்குறை மற்றும் முகாமைத்துவ உதவியாளர் உத்தியோகத்தர்களிற்கு பதிலாக பட்டதாரி பயிலுநர் உத்தியோகத்தர்களை நியமனம் செய்தமை போன்ற காரணங்களால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. | தேவைப்பட்டால் மாத்திரமே நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் 18 செலவின விடயங்கள் தொடர்பாக ரூபா 2,343,304 மீதியொன்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் குறித்த பொறுப்புக்களுக்கு மேலதிகமாக 2020 ஆம் ஆண்டுடன் தொடர்புடையதாக 2021 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 4 மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் ரூபா 2,097,478 தொகை செலுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் மொத்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 2,097,478 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | கணக்கைத் தயாரிக்கும் சமயம் வரை பெறப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் குறித்த காலப்பகுதிக்கு இடையில் பெறப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | அனைத்து செலுத்த வேண்டிய பெறுமதிகளும் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக 2 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 1 மூலதன செலவின விடயம் தொடர்பாக முறையே ரூபா 203,575 மற்றும் ரூபா 30,500 தொகையான நிதியேற்பாட்டு சேமிப்புக்களை விஞ்சி ரூபா 138,131 மற்றும் ரூபா 483,491 பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணம் 94(02) இன் பிரகாரம் குறித்த கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நிதியேற்பாடுகளின் சேமிப்புக்களை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படுவதை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அம் மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மனித வளங்களின் பற்றாக்குறை காரணமாக உரிய நடவடிக்கைகள் தாமதமாகியிருந்தது என்பதையும் குறித்த ஆவணங்களை உரிய திகதியில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான விதத்தில் குறிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில் வழங்குதல் இடம்பெறுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறதிப்படுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு வழங்கப்பட்ட 04 கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | மனித வளங்களின் பற்றாக்குறை காரணமாக உரிய நடவடிக்கைகள் தாமதமாகியிருந்தது என்பதையும் குறித்த ஆவணங்களை உரிய திகதியில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | -மேற்படி- |
| (இ) | உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு அக்கபூர்வமான நடைமுறையொன்று காணப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமனம் செய்வதற்கு தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் நிதிப்பிரமாணம் 71 இன் பிரகாரம் எதிர்காலத்தில் குறித்த பதவியை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | -மேற்படி- |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்டவாறு நிதிப்பிரமாணம் 756(6) | 2020 ஆம் ஆண்டிற்கான களஞ்சியங்கள் மற்றும் சொத்துக்களின் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அது தொடர்பான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு | இது 2020 ஆம் ஆண்டில் புதிதாக நிறுவப்பட்ட அமைச்சு என்பதாலும், உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாகவும் களஞ்சியங்கள் மற்றும் | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் தொடர்பான மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஆ) | 2019 திசெம்பர் 30 ஆம் திகதிய 2019/25 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | 2020 ஆம் ஆண்டிற்காக 9 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 4,000 தொகையான விசேட முற்பணங்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தன. | 2020 ஆம் ஆண்டிற்காக 9 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 4,000 தொகையான விசேட முற்பணங்கள் தற்போது அறவீடு செய்யப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 2020 சனவரி 09 ஆம் திகதிய எஸ்ஏ/ஏஎம்பி/வைப்பு/மாற்றம் ஆம் இலக்க கடிதம் | 2020 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2187/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்ட தேசிய அருங்கலைகள் நிலையம் (நெலும், பொக்குண திரையரங்கம்) அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் தனியான செயற்திட்டமாக கருதப்பட வேண்டும். நிதிக் கொள்கைத் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து அதைப் பேணுவதற்கு பாதீட்டின் மூலம் தேவையான நிதியேற்பாடுகளை | அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்வதற்கும் ஈட்டிய வருமானத்தை உரிய செலவினத் தலைப்பிற்கு செலவு வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 6000-0-0-020-009-0 ஆம் இலக்க வைப்பு கணக்கு மூலம் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | |

**2.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நெலும் பொகுண திரையரங்கம் 2020 ஆகஸ்ட் 09 தொடக்கம் இந்த இராஜாங்க அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் இயங்கி வந்ததுடன் திரையரங்கில் பயன்படுத்துவதற்குத் தேவையான உபகரணங்களை வைத்திருக்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான பேலியகொட களஞ்சிய வளாகம் 2017 ஆகஸ்ட் 01 முதல் 2020 யூலை 31 வரையான 03 ஆண்டு காலப்பகுதிக்கு ரூபா 236,745 மாதாந்த வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தது. களஞ்சிய வளாகம் தொடர்பாக 2020 செப்தெம்பர் வரை நிலுவையாக உள்ள குத்தகை வாடகையாக ரூபா 11,743,287 தொகையை இராஜாங்க அமைச்சு செலுத்தியிருந்த போதிலும் அதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் எந்தவொரு உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. எழுத்து மூலமான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படாமல் நிலுவையாகவுள்ள குத்தகை வாடகையை செலுத்தும் போது ரூபா 355,395 தண்டப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், | தேசிய அருங்கலைகள் நிலையத்தின் (நெலும், பொக்குண திரையரங்கம்) புனரமைப்பு தொடர்பான உபகரணங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான பேலியகொட களஞ்சிய வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளன. 2017.08.01 முதல் 2020.09.30 வரையான காலப்பகுதியின் போது மாதாந்த வாடகைக்கான குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், நகர அபிவிருத்தி அதிகாரசபையில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள உபகரணங்களின் பொறுப்பை உரிய முறையில் ஒப்படைத்ததமை மற்றும் முன்னாள் அமைச்சின் செயலாளர் திரு.எஸ்.ரீ.கொடிகாரவினால் களஞ்சிய வளாகத்தின் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை என்பன காரணமாகவும் அரசாங்க நிறுவனமாக இருப்பதன் விளைவாகவும் நிலுவையாகவுள்ள தொகைக்குரிய கொடுப்பனவை மேற்கொள்ள முடிந்திருந்தது. குறித்த பேலியகொட களஞ்சிய வளாகத்தை பெற்றுக்கொள்ளும் சமயத்திலும் 2019 நவம்பர் முதல் 2020 ஆகஸ்ட் வரையிலான காலப்பகுதியின் போதும் இந்த நிலையம் செயற்பட்ட முறையே | களஞ்சிய வளாகத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எழுத்துமூலமான உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடுவதற்கும் அதற்காக செலுத்தப்பட்ட தண்டப்பணம் மற்றும் அதிகரிக்கப்பட்ட வாடகையை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2020 யூலை வரை காணப்பட்ட ரூபா 236,745 தொகையான மாதாந்த வாடகை 2020 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 306 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 724,125 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. | சனாதிபதி செயலகம் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் எந்தவொரு உடன்படிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தற்போது அமைச்சுடன் இணைந்து உடன்படிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் குறித்த உடன்படிக்கையை ஆரம்பம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தயாரித்து, அடுத்த இரண்டு வாரங்களினுள் கையொப்பமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |

**2.6 வங்கி கணக்குகளின் செயற்பாடு**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் மாத வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 227,250 இனங்காணப்படாத கொடுப்பனவுகளை இனங்கண்டு சீர்செய்வதற்கு கணக்காய்வு திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களையும் கணினிமயப்படுத்துதல் மற்றும் இனங்காணப்படாத கொடுப்பனவுகளை சீர்செய்தல் ஆகிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | இனங்காணப்படாத கொடுப்பனவுகளை இனங்கண்டு சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயலாற்றல் மீளாய்வு**

**3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் பொது நிதித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டல் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இந்த இராஜாங்க அமைச்சின் தூரநோக்கானது ‘‘நிலைபேறான அபிவிருத்தியடைந்த இலங்கை’’ ஆக உருவாக்கப்பட்டுள்ளதுடன் இது இராஜாங்க அமைச்சின் | அமைச்சின் ஸ்தாபிப்பு தொடர்பில் வழங்கப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், அமைச்சின் தூரநோக்கை மீளாய்வு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | இராஜாங்க அமைச்சின் வகிபங்கு, பொறுப்புக்கள் மற்றும் நோக்கங்கள் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | வகிபங்கு, பொறுப்புக்கள் மற்றும் நோக்கங்கள் தொடர்பில் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | | தூரநோக்கு உருவாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ”தெயே உறுமய தருவந்தயி” நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஆதிவாசிகளை பாதுகாப்பதற்கான செயற்திட்டம் ஆகியவை செயலாற்றல் குறிகாட்டிகளாக இனங்காணப்பட்டன. ”தெயே உறுமய தருவந்தயி” நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு தேவையான பதவிணயியினரிற்கு பயிற்சி அளிப்பதற்காக செலவின விடயக் குறியீடு 401-2-3-2401 இன் கீழ் ரூபா 1,200,000 நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 169,464 நிதியேற்பாடு மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. குறிகாட்டிகளை அடைந்துகொள்வது தொடர்பான செயற்பாடுகள் ஆற்றப்பட்டிருக்காத போதிலும், எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டில் 75 சதவீதமாக உண்மையான வெளியீட்டை குறிப்பிடுதல் சர்ச்சைக்குரியதாக காணப்பட்டது. ஆதிவாசிகளை பாதுகாப்பதற்கான செயற்திட்டத்திற்கான குறிகாட்டியின் பௌதீக செயலாற்றல் 100 சதவீதமாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பான நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை அல்லது செயற்பாடுகள் எதுவும் ஆற்றப்பட்டிருக்கவில்லை. | <u>குறிகாட்டி 1 - ‘‘தெயே உறுமய தருவந்தயி’’ நிகழ்ச்சித்திட்டம்</u><br><br>‘‘தெயே உறுமய தருவந்தயி’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலை சிறுவர்களை இலக்காகக் கொண்டு விரிவுரைகளை ஏற்பாடு செய்தல், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்து நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டமாகும். இந்த அமைச்சின் செலவின விடய குறியீடு 401-3-3-2401 இன் கீழ் இந்த இராஜாங்க அமைச்சை ஸ்தாபிக்கும் போது 2020.08.09 இல் பாதீட்டு நிதியேற்பாட்டின் மூலம் ரூபா 1.2 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டிலும் புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு அமுல்ப்படுத்திய அதேவாறு குறித்த செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு முதலில் திட்டமிட்டிருந்த போதிலும் கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டதால் இந்த செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவது கடினமாக இருந்தது. பின்னர், அமைச்சு செயலாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம், சிறுவர்களில் கலைகளின் நாட்டத்தை மேம்படுத்தி பாரம்பரிய கலாசார அம்சங்களைத் தொடரும் நோக்கத்துடன் இச் செயற்திட்டத்தின் கீழ் அறநெறிப் பாடசாலைகளின் சிறுவர்களுக்கு ஹெவிசி ட்ரம்ஸ் தொகுதியை (sets of Hewisi Drums) வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுகை | செயலாற்றல் குறிகாட்டிகளை அடைந்து கொள்வதற்குரிய செயற்பாடுகளை ஆற்றுவதற்கும் செயலாற்றல் அறிக்கையை சரியாக தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

நடவடிக்கைகள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளை தெரிவு செய்தல் என்பன இறுதிக் கட்டம் வரை அமுல்ப்படுத்தப்பட்டதுடன் தேவையான வளவாளர்களின் உதவிகளை வழங்குவதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு சம்மதம் தெரிவித்திருந்தது. இருப்பினும், ஆண்டு முடிவடைந்ததால், திறைசேரிக்கு நிதியேற்பாட்டை மீளளிக்க வேண்டியிருந்தது.

நிதி செயன்முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடிந்திராத போதிலும் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு தேவையான ஏனைய அனைத்து விடயங்களும் பூர்த்தி செய்யப்பட்டதன் விளைவாக பௌதீக செயன்முன்னேற்றம் 75 சதவீதமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>குறிகாட்டி 2 – ஆதிவாசிகளை பாதுகாப்பதற்கான செயற்திட்டம்</u>

செலவின விடயக் குறியீடு 401-2-3-1509
தம்பான ஆதிவாசி மரபுரிமை நிலையத்தின் பராமரிப்பு செலவீனமாக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடு தம்பனை பூர்வீக நாட்டுப்புற மரபுரிமை நிலையத்தின் சம்பளக் கொடுப்பனவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.
மாதமொன்றிற்கு ஆகக்கூடிய ரூபா 125,000 தொகைக்கு உட்பட்டு குறித்த கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் இந்த அமைச்சின் கீழ் 2020 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந் நிதியேற்பாடுகள் இராஜாங்க அமைச்சை நிறுவும் போது அமைச்சின் செலவின விடயத்தின் கீழ் வழங்கப்பட்டன. தம்பான ஆதிவாசி மரபுரிமை நிலையத்தின் பராமரிப்பு செலவினமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட குறித்த

| | | | |
|---|---|---|---|
| | | நிதியேற்பாடு சம்பளக் கொடுப்பனவிற்காக மாத்திரமே பயன்படுத்தப்படுவதால் அது அபிவிருத்தி செயற்திட்டங்களின் கீழ் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>ஆதிவாசி கிராமங்களைப் பாதுகாப்பதற்கான செலவின விடயக் குறியீடு 401-2-3-2001 இன் கீழான நிதியேற்பாட்டின் செயன்முன்னேற்றம் 100 சதவீதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் போது அதில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பணிகளின் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததால் 2020 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையில் பௌதீக செயன்முன்னேற்றம் 100 சதவீதமாக குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (இ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அமைச்சு 2020.08.09 ஆம் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததால் புதிய செயற்திட்டங்கள் எதுவும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் தேசிய மரபுரிமைப் பிரிவின் ஊடாக அமுல்ப்படுத்துவதற்காக அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மாத்திரமே அமுல்ப்படுத்தப்பட்டன. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கும் செயலாற்றல் அறிக்கையில் அவற்றைக் குறிப்பிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பன முறையே 62, 20 மற்றும் 40 ஆக காணப்பட்டன. எனினும், மேற்படி பந்தியில், இது முறையே 58, 21 மற்றும் 37 ஆக குறிப்பிடப்பட்டுள்ளன. | அச்சிடல் தவறுகள் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பன முறையே 58, 21 மற்றும் 37 ஆக குறிப்பிடப்பட்டுள்ளன. இது முறையே 62, 22 மற்றும் 40 ஆக திருத்தப்பட வேண்டும். | செயலாற்றல் அறிக்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | இணக்க அறிக்கையில் இணங்கப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்ட 7 தேவைப்பாடுகள் இணங்கியிருக்காதமை | 2020.08.09 ஆம் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட புதிய அமைச்சாக உள்ளதால் | செயலாற்றல் அறிக்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | தேவையான பதவியணியினர் பற்றாக்குறை, அலுவலக உபகரண பற்றாக்குறை, அலுவலக வளாகத்தில் இடவசதியின்மை போன்ற சிரமங்களுக்கு மத்தியில் அமைச்சின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், அமைச்சின் செயற்பாடுகளை எளிதாக்குவதற்கு கடினமான செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | எடுக்கப்பட வேண்டும். |

**3.2 பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

| கணக்காய்வு ஐயவினா தொடர்பான விபரம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சிற்கு வழங்கப்பட்ட 04 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2021 ஒக்தோபர் 04 வரையிலும் பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மனித வளங்களின் பற்றாக்குறை காரணமாக விடயங்கள் தாமதமாகியிருந்ததுடன் எதிர்காலத்தில் உரிய திகதியில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் குறிப்பிட்ட காலத்திற்குள் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராமோதய நாட்டுப்புற கலை நிலையம் 2020 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2187/27 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் இராஜாங்க அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும் இராஜாங்க அமைச்சு சட்டரீதியாக நிலையத்தை நிறுவுவதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. நிலையத்திற்கு தேவையானதாக தீர்மானிக்கப்பட்ட 24 பதவியணியினரிற்கான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்கள் என்பன கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கிராமோதய நாட்டுப்புற கலை நிலையத்தை சட்டரீதியாக நிறுவுவதற்கும் பதவியணியினரிற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்விற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை அல்லது உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளக கணக்காய்வாளர் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் நிதிப்பிரமாணம் 71 இன் பிரகாரம் குறித்த பதவியை உருவாக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமனம் செய்து உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**5. மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 62 ஆக இருந்த இராஜாங்க அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சிரேஷ்ட நிலையில் 05, மூன்றாம் நிலையில் 03, இரண்டாம் நிலையில் 23 மற்றும் ஆரம்ப நிலையில் 11 உள்ளடங்கலாக 40 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது. மேலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்காத 19 பட்டதாரி பயிலுநர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பட்டதாரி பயிலுநர்களுக்காக கோரிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அவர்கள் பிரதேச செயலகங்களால் இராஜாங்க அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்தனர். அந்த உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் பிரதேச செயலகங்களினால் செலுத்தப்படுகின்றன. | சேவை தேவைப்பாட்டை கருத்தில் கொண்டு வெற்றிடமாகவுள்ள பதவிகளை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |